08.01.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 43/2021

அ.சா. 7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகுமார் | | |
| த/பெ | சாமிகண்ணு | மதம் | |
| கிராமம் | பள்ளிபுதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | கண்டமங்கலம் | வயது | 50/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சைக்கிள் ரிப்பேர் செய்யும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கிகல் இறந்துபோன ராஜ்கிரணை தெரியும். அவர் எனது மனைவி வரலட்சுமியின் மாமன் மகன் ஆவார். அ.சா.1 வாசுகியை எனக்கு தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகளில் 2,3 எதிரிகளை தெரியும். 1,4 எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக என்னை போலீசாரி என்னை காவல் துறையினர் விசாரிக்கவில்லை.

*(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறூக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)*

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.04.2019ந் தேதி அதிகாலை 3.30 மணி அளவில் நானும், எங்கள் ஊர் காத்தவராயன் என்பவர் மணக்குளவினாயகர் மருத்துவமனைக்கு சென்று விட்டு பள்ளினேளியனூர் ரயில்வே டிராக் அருகில் சென்ற போது வாட்டர் கம்பெனி அருகில் எங்கள் ஊர் ராஜ்கிரன் என்பவரது மோட்டார் சைக்கிள் எண்.PY01AB1622 என்ற ஹோண்டா யூனிகார்னில் வளவனூர் தீபக்ராஜ் மற்றும் அவருடன் மற்றொருவரும் பாயில் சுருட்டி எதையோ நடுவில் வைத்துக்கொண்டு எங்கள் ஊர் பக்கம் இருந்து வேகமாக போனவர்களை பார்த்து எதற்கு இவ்வளவு வேகமாக

போகிறார்கள் என்று பேசிக்கொண்டு வந்தோம் என்றும், காலையில் 6 மணிக்கு எங்கள் ஊர்க்காரர்கள் ராஜ்கிரன் பள்ளிநேளியனூர் ரயில்வே டிராக் அருகில் தலை மற்றும் கால்களில் காயம்பட்டு இறந்துகிடப்பதாக சொன்னார்கள் என்றும், நாங்கள் இருவரும் அங்கு சென்று பார்த்தோம் என்றும், 3.30 மணிக்கு நாங்கள் பார்த்தது ராஜ்கிரனை கொலை செய்துதான் எடுத்து சென்று இருப்பார்கள் என்றும், தீபக்ராஜ், ராஜ்கிரன் மனைவி கஸ்தூரி, கஸ்தூரியின் அம்மா கலா ஆகியோர் சேர்ந்து சதி திட்டம் தீட்டி கோடாலியால் ராஜ்கிரனை தலையில் வெட்டிகொலை செய்தும், பிரேதத்தை ரயில்வே டிராக்கில் போட்டதாகவும், தீபக்ராஜீவும், கஸ்தூரியும் ஆழீயூர் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் சரண்டர் ஆகி மேற்படி விவரங்களை சொல்லிக்கொண்டதாக நான் கேள்விப்பட்டேன் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுகொண்டதன் பேரில் எதிரிகளை காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.</u>**